தமிழில் எழுதலாம் வாருங்கள்... வலையில் பரப்பலாம் வாருங்கள்...



தீபச்செல்வன் எழுதும் "தீபம்"

தாயகத்திலிருந்து வலம்வரும் வலைப்பூக்களில் பதிவர்கள் கவிதைகளுக்கு பெரிதாக முக்கியத்துவம் கொடுப்பதில்லை எனினும் தீபச்செல்வன் எழுதும் இவ் தீபம் வலைபபூவானது கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படுகின்றது. தாயகத்திலிலிருந்து எழுதுவதாலும் தாயக மக்கள் படும் அவலங்களையும் நேரில் உணர்ந்ததாலும் அவர்க அனுபவித்த வலிகளை கவிதையாகப் படைத்து உலகெங்கும் உள்ள எம் உறவு களிடையே கொண்டு செல்கிறார்.அவரது வலைப்பதிவி லுள்ள பல கவிதைகளினைப் பற்றி எழுதுகையில் எதை பரிந்துரைப்பது என்பதை விட எதை பரிந்துரைகாமல் விடுவது என்னும் குழப்பமே எஞ்சுகின்றது. கடந்த காலங்களில் அவர் எழுதியவற்றை நீங்கள் வாசிக்கையில் அவற்றின் பெறுமதியை நீங்கள் உணர்வீர்கள். அவற்றில் அனேகராலும் வாசிக்கப்பட்ட அவ்வாறானதோர் கவிதையொன்று " பதுங்கு குழியில் பிறந்த குழந்தை"

குழந்தைகளின் புன்னகைகளை
நிலங்களின் அடியில்
புதைத்து வைத்துவிட்டு - நாம்
நசுங்கிய எதிர்காலத்தோடு
அமர்ந்திருக்கிறோம்
பதுங்கு குழியினுள்
அவர்களின் பள்ளிக்கூடங்கள்
தொலைந்துவிட்டன.
இசையின் நாதம் செத்துவிட
குழந்தைகளின் பாடல்கள்
சாம்பலாகிப் பறக்கின்றன.....

இவ்வாறு தொடரும் கவிதையில் எம் வருங்கால சந்ததி எதிர்நோக்கும் பிரச்சினைகளை வரிகளால் வடிக்கிறார். அத்துடனில்லாமல் அவர்களது வலிகளைச் சுமந்து நிற்க்கும் கவிதைகளை ஆங்கிலத்திலும் வடித்து தமிழர்களல்லாத மற்றும் தமிழை மறந்த தமிழர் களிடத்தும் போய்ச் சேரவேண்டும் என்ற நோக்கத்துடன் வலைப்பதிவுகளில் எழுதி வருகிறார். அங்குள்ள கவிதை வரிகள் சில இங்கே ஆங்கிலத்தில்.

Kilinochchi is now
a city of refugees
Pali will rise to inundate the fields.
The war begins
from the dreams
of children
who ate poisoned food.

வலைப்பதிவுகள் - அறிமுகம்

எழுதுவது: **யாழ்பாடி**

இவர் கவிதைகளை எழுதும் கவிஞன் மட்டுமன்றி சிறந்த புகைப்படக் கலைஞனும் ஆவார். ஆமாம் அதனால் இவர் கவிதைகளுடன் மட்டும் நின்றுவிடாது அம்மக்களின் அவலங்களை புகைப்பட ஆதாரங்களுடன் தருகிறார். ஆயிரம் வார்த்தைகள் சொல்வதை ஓர் புகைப்படம் சொல்லிவிடுமென்பார்கள் அது உண்மை தான். ஏனெனில் தாயக மக்கள் படும் அவலங்களை யாரேனும் சொல்லிக் கேட்பதையோ அல்லது வாசிப்பதையோ விடுத்து புகைப்படங்களைப் பார்ப்பதால் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இவரது வலைப்பதிவுகளை நீங்கள் தரிசிக்க விரும்பின் தீபம் வலைப்பூவின் முகவரி:-http://deebam.blogspot.com/

தீபஒளி வலைப்பூவின் முகவரி:- http://olideebam.blogspot.com/ எனும் முகவரிகளுக்குச் செல்லுங்கள்

உங்கள் வலைப்பதிவுகளையோ அல்லது நீங்கள் விரும்பி வாசித்த வலைப் பதிவுகளையோ அறிமுகப் படுத்த விரும்பின் blogs@orupaper.com என்ற முகவரிக்கு மின்னஞ்சலைத்தட்டிவிடுங்கள். அவை இங்கே அடுத்து வரும் இதழ்களில் அறிமுகப்படுத்தப்படும்.

நித்தியம் வழிநடத்தும் தத்துவம்

தத்துவஞானி அன்ரன் பாலசிங்கம்
அண்ணா அவர்களின் இரண்டாம் ஆண்டு
நினைவு நாளை முன்னிட்டு...

மகிந்த சிந்தனை மாயை
மிகுந்து விசாலித்த அரசின் பிரதிநிதிகள்,
திரண்ட தரவுப் பயிற்சிகளோடு,
பட்டறிவோடு வரவு தந்து வீற்றிருந்த
ஒவ்வொரு பேச்சுவார்த்தை
அரங்குகளிலும், அவர்களைஞ்
உரமிழந்து விழுந்து,
மண் கவ்வி மீழவைத்த
மாபெரும் மதி உரைஞர் எம்
பால அண்ணரை..
மனம் கதற நினைவு கொள்ளும்
இனிய நேரமிதில் பணிந்தே
அந்தத் தத்துவ மேதைக்கு
வைத்திடும் கவி மாலையாக
இதை நாம் மகிமைப் படுத்துவோம்!

திம்புப் பேச்சு முதல் எம் தரப்பில் தம்
ஞானம் துலங்கப் பங்கு பற்றிய
எங்கள் அண்ணன் அன்ரனுக்கு
முன் நிமிரமுடியாது, அன்று..
ஜெனிவாவில்..
சிங்க அரசின் நிமல் சில்வா கோஸ்டி
தம் நிலை தளர்ந்து.. அன்ன
அரங்கினிலே அழுவாரைப் போல்
தோல்வி உழுத முகங்களோடு,
மீழ் நடையிட்ட கணங்களை
மீட்டியே பாற்போம்!

யுத்த நிறுத்ததை மாற்றி நித்தம்
சண்டையிடும் பௌவுத்த சிங்களச்
சி;த்தாந்தம் வெல்லவே..
சித்தம் மசிழவே திரும்புவோம் எனவே,
நித்தம் பேச்சு வார்த்தைகளில்
மனம் உந்தியே வந்த
வெந்தழல் மிருக வேடுவரை..
வார்த்தைக் களமாடி,
கூர்த்த தன் அறிவால்,
குப்புரச் சரித்த சாதனையாளர்
பாலா அண்ணாவின் சாவை,
சிங்களத்துச் சண்டாளர்
வெடி கொழுத்தி, பாற்புக்கை கொடுத்து,
மூற்கமாகக் கொண்டாடினர் எனில்,
அவர்களின் மாற் புறத்தை அந்த
மானத் தமிழன் பாலா அண்ணர்..
தன் தத்துவ வித்தகத்தால்
எப்படியெல்லாம் விழாசியிருப்பார்
என்றுஆழமாய் எண்ணியே எழுமின்!
அன்று ஜெனிவாவில்..

மென்று நடுங்கிய சிங்களம்,
தமிழர் தரப்பில் இருந்து,
தொத்துப் படைகள் எதையும்
தாம் தத்தெடுத்து வளர்க்கவில்லை
என்று வைத்த அந்த மெத்தமிகு
அப்பட்டமான பொய்யைத்
தகர்க்கவென ஆங்கே அன்ரன் அண்ணா
அளித்த அட்டவணை ஆதாரங்களைக்
கண்டு, அரசுதரப்புக் கொட்டமடங்கியதே!
வரித்த வல்லினவாதத்தின்
குருசேத்திரப் போரில் – இவர்
ஒரு அருச்சுனன் என்று அன்று
பெருத்த எழுத்துக் களில்
பத்திரிகைகள் பலவாறு புகழ்ந்தனவே!

தாயக வரலாற்றில் தமிழர் தரப்பு
ஓயாத பேச்சுக்களையும்,
ஓப்பந்தங்களையும்
எப்போதும் செய்துள்ளார்கள்!
ஆனால், அவையாவும்
இனவாதக் கயமை அரசியலில்
பொடியாகிப் போயின! – இனியும்
நெடிதே இது தொடரும் என,
கொடிய பேரினதாக் கோட்பாட்டை
வையப்பரப்பில் வடிவாக வடியவைத்து,
பாலா அண்ணர்
பல முறையும், பல திக்கும்
உளம் நொந்து கூறினாரே!

வியட்நாம் விடுதலை இயக்கம்
தன் வரலாற்றுப் போரில்
அயராது பத்து ஆண்டுகள்
அரசியல் பேசித்தான் பார்த்தது!
பேச்சுக்குப் புலி பின்நிற்கமாட்டாது.
பேரினவாதத்தோடு பேசிப் பயனில்லை
ஆனால் பாரும் நாம் பேசுவோம்!
என்றாரே
தன் இயல் நகைச்சுவையை ஏற்புடன்
பாவிக்கும் எங்கள் பாலா அண்ணர்!

ஆம்! விரிந்த வரலாறாய் நிற்கும் எம்
விடுதலைப் போர் வெல்லும்!
சரித்திரம் வரைந்தே சரிந்த
மாவீரர்களது சாதனை பலிக்கும்!

கார்ள்மாக்சின் தத்துவத்தை
முன்வைத்து..
லெனினும், மாசேதுங்கும்
கோசிமினும், பிடல் கஸ்ரோவும்
தத்தம் தேசத்தை விம்முயர்
வெற்றியோடு, வியத்தகு திறனோடு
அமைத்தார்களே!

அதேவிதத்தில்.. எங்களின்
சங்கைக்கு உரிய தேசியத் தலைவரும்
மங்காத மைகிமை மிகு
பாலா அண்ணரின் க்ஷதத்துவ
வரைவினை வைத்து,
தமிழீழ சோஸலிச தனி நாட்டை
நிறுவும் நாள் அதி தூரத்தில் இல்லை
எனவே துள்ளி எழுவோம்!

ந. கிருஷ்ணசிங்கம். நோர்வே.

மிகத் துல்லிய ஒளி/ஒலித் தெளிவுடன் தமிழ் தொலைக்காட்சிகளை கண்டு களிக்க...
நீண்ட காலம் பாவிக்க கூடிய...ஒரு வருட உத்தரவாதத்துடன்...
அழகான ரிசீவர்!

24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்

அழையுங்கள்:

தாஸ்: 07885 987 857 ராம்: 07861 371 837 டயஸ்: 07960 225 850 பிரகாஸ் : 07968 960 666 சுபாஸ் : 07869 290 162